# முன்னுரை

## முன்னுரை

நான் பிறந்து வளர்ந்த ஊர் கீழ்வாணி எனும் சிற்றூர். முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் பத்து வயதுச் சிறுவனாக இருந்த போது என் கிராமத்தில் படித்தவர்கள் மிகச் சிலரே. மாதத்தில் ஐந்து, ஆறு பேயோட்டுதல் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும். என் தமக்கையார் உடல் நலமற்றிருந்த போது அவர்களுக்குப் பேய் பிடித்திருக்கிறது என்று சொல்லிப் பேயோட்டிய நிகழ்ச்சி என் நெஞ்சில் பசுமையாக உள்ளது. பேயென்பது அஞ்சத்தக்கதாயினும் பேயாட்டம் களிப் பூட்டுவதாக இருக்கும். பூசாரிகளின் பாட்டும் உடுக்கு இசையும் கலைக் கூறுகளைக் கொண்டிலங்குவதே இதற்குக் காரணமெனலாம். நான் கல்லூரிப் படிப்புக்காக வெளியூர் செல்லும் வரை என் கிராமத்தில் பேயாடிய பெண்கள் கணக்கிலர்.

இன்றைக்கும் இது தொடர்கிறது. ஆனால் குறைந்திருக்கிறது. கல்வியும் மின்சாரமும் கிராமங்களை எட்டியிருப்பதால் அறியாமையும் அச்சமும் விலகிக் கொண்டிருக்கின்றன. கல்வி அக இருட்டையும், மின்சாரம் புற இருட்டையும் விரட்டத் தலைப்பட்டுள்ளதே பேயோட்டம் குறைவதற்குக் காரணமாகும். பெரியார் மாவட்ட கிராமங்களில் இன்றும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் இப்பேயோட்டம் என்னுள் நீங்காத ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டு என்னை ஊட்டுவித்ததன் விளைவே இவ்வாய்வு எனலாம்.

பெரியார் மாவட்டத்தில் ஈரோடு, தாராபுரம், காங்கயம் பெருந்துறை, கோபி, பவானி, சத்தி ஆகிய ஏழு வட்டங்கள் உள்ளன. இவ்வேழு வட்டங்களைச் சேர்ந்த கிராமங்களிலும் பேயோட்டம் நிகழ்ந்து

கொண்டு தானிருக்கிறது. ஏப்ரல் 1990 தொடங்கி அக்டோபர் 1994 ஈறாக உள்ள நான்காண்டு இடைவெளியில் பெரியார் மாவட்டத்தில் பேயோட்டுதல் எங்கு நடைபெற்றாலும் ஒலிப்பதிவு நாடாவுடனும் நிழற்படக் கருவியுடனும் அவ்விடத்திற்குச் சென்று விடுவது என் வாடிக்கையானது.

நான் மேற்கொண்ட களப்பணியில் இடையூறுகள் மிகுந்திருந்தன. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது பேயோட்டுதல் பெரும் பாலும் இரவு நேரங்களிலேயே நடைபெறுகிறது; நள்ளிரவு கடந்த பிறகும் நிகழ்ச்சி தொடரும். அதனால் அக்கிராமங்களிலேயே தங்க வேண்டிய நிலை ஏற்படும். இரண்டாவது இந்நிகழ்ச்சி நடக்கும் கிராமங்களுக்குப் பேருந்து வசதிகள் மிகக் குறைவாக இருக்கும்; சில ஊர்களுக்குப் பேருந்து வசதிகளே இருக்காது. மூன்றாவது சில நேரங்களில் அனைத்து ஏற்பாடு களோடும் நாம் காத்திருக்கும் போது பேயோட்டம் நடக்காது. நான்காவது திட்ட மிட்டுச் செயல்படுவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவு. ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நாளில் பேயோட்டுவதாகப் பூசாரி தகவல் கொடுப்பார்; அந்நாளில் அவ்விடத்திற்குச் சென்றால் பூசாரி வந்திருக்க மாட்டார். அங்குள்ளவர்களைக் கேட்டால் வேறொரு நாளுக்கு நிகழ்ச்சி மாற்றப்பட்டு விட்டதாகத் தகவல் கிடைக்கும். ஓரிடத்திற்கு ஐந்து முறை சென்று, ஐந்து முறையும் ஏமாற்றத்தோடு திரும்பியதுண்டு.

இவ்விடையூறுகளால் ஆய்வாளர் மனம் தளர்ந்து விடக் கூடாது. திட்ட மிட்ட படி குறித்த நேரத்தில் குறித்த செயல்களைச் செய்யும் ( Planning the schedule and proceeding as per the schedule) நகரப் போக்கினைக் கிராமங்களில் எதிர்பார்க்க முடியாது.

ஆய்வுக்களங்களைச் சேர்ந்த நாட்டுப்புற மக்களின் வட்டார வழக்குகளில் ஆய்வாளருக்குப் பயிற்சி இருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

அப்பயிற்சியே அவர் தம் பாடல்களைப் பதிவு நாடாவிலிருந்து படியெடுப்பதில் ஏற்படும் தடங்கல்களைக் களையும்.

இப்பேயோட்டப் பாடல்கள் மந்திரமும் மருத்துவமும் சார்ந்த தாகலின் இவை இத்தொழிலில் ஈடுபடாத ஏனையோரிடையே பரவுதல் இல்லை. இதனால் குறிப்பிட்ட சிலரிடமே இப்பாடல்கள் கிடைக்கும். இவர்களும் செயற்கைச் சூழல்களில் இப்பாடல்களைப் பாடுவதில்லை.

தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியின் பலனாக இயற்கைச் சூழல்களில் பதினைந்து பாடல்களைப் பதிவு செய்தேன். வினா நிரல் மூலமும், நேர் காணல் மூலமும் பூசாரிகள், பேயாடியோர், அவர் தம் உறவினர், நண்பர்கள் ஆகியோரிடமிருந்து இயன்றவரை தரவுகள் தொகுக்கப் பெற்றன. கோவை மருத்துவக் கல்லூரி மன நலத்துறைப் பேராசிரியர் டி.என். ஜெயராம் அவர்களுடன் நடத்திய நேர்காணல் சில தகவல்களைத் தந்தது. இவையாவும் என் ஆய்வுக்கு முதன்மைச் சான்றுகளாயின. 'பேய்' 'பேய் நம்பிக்கை' 'பேயாட்டம்' 'பேயோட்டச் சடங்குகள்' 'மந்திரம்' 'சடங்குகள்' பற்றி இதுவரை வெளிவந்துள்ள நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கோவைகள், கட்டுரைகள், இதழ்கள் ஆகியன துணைமைச் சான்றுகளாயின.

இவ்வாய்வு மானிடவியல் சமூகவியல் உளவியல் அடிப்படைகளில் அமைந்துள்ளது. பேய் பற்றிய கருத்துருவாக்கம் மானிடவியலார் பார்வையிலும் பேயோட்டுதல் நிகழ்ச்சி மனவியலார் பார்வையிலும் நுணுகி நோக்கப் பெற்று ஆய்வு முடிவுகள் எய்தப் பெற்றுள்ளன. பேயோட்டப் பாடல்களின் சமுதாயப் பின்னணி கருத்தில் கொள்ளப் பெற்றே இவ்வாய்வு கட்டமைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாய்வேடு ஆறு இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது.

இயல் ஒன்று. 'பேயோட்டப் பாடல்கள் - நாட்டுப்புற இயலின் ஒரு கூறு'.

இவ்வியல் ஒரு மானிட வியலாய்வாகும். பேய் நம்பிக்கையின் ஆணிவேர் அடையாளங்காட்டப் பட்டுள்ளது. இந் நம்பிக்கையின் தொன்மை உலகலாவிய வரலாற்றுப் பின்னணியில் ஆய்வு செய்யப் பெற்றுள்ளது. பேயோட்டப் பாடல்கள் எவ்வடிப்படையில் நாட்டுப்புறவியலின் கூறாதல் தகும் என்பது நாட்டுப் புறவியல் அறிஞர்களின் கருது கோள்களை வழுவாது பின்பற்றி நிறுவப்பட்டுள்ளது. நாட்டுப்புற வியலின் பல்வேறு பகுதிக் கூறுகளிலும் 'பேய்' பற்றிய எண்ணங்கள் வேரூன்றி விழுது விட்டிருப்பது புலப்படுத்தப் படுகிறது. இப்பேயோட்டப் பாடல்கள் நாட்டுப்புற இலக்கியங்களாகும். திறப்பாடும் காரண காரியத் தொடர்புகளோடு நிலைநிறுத்தப் படுகிறது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டச் சிற்றூர்களின் பேய் நம்பிக்கைகளும், பழங் குடியினரின் பேய் பற்றிய சித்தாந்தங்களும், கல்வியறிவு பெற்ற நகர் வாழ் நாகரிக மக்களின் பேய் நம்பிக்கைச் செயல்பாடுகளும் ஆய்வு செய்யப் படுகின்றன.

இயல் இரண்டு. 'இலக்கியங்களிலும் சமயங்களிலும் பேய் நம்பிக்கை'.

இவ்வியல் ஒரு வரலாற்றியலாய்வு என்பது பொருந்தும். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பழமையானது தொல்காப்பியம். இத் தொல்காப்பியம் தொடங்கி இன்றைய சிறு கதைகள் வரை பேய் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள் ஆய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு சமயமும் தத்தம் இலக்கியங் களில் பேய் பற்றிக் குறிப்பிட்டுள்ள செய்திகள் ஒப்பு நோக்கப் பெற்றுள்ளன. பல்வேறு கால கட்டங்களில் பேய் பற்றிய கருத்தாக்கம் மாறி வந்திருப்பது முறையாக அவ்வக் கால இலக்கியங்களின் வழிச் சுட்டிக் காட்டப் படுகிறது. அகராதிகள், நிகண்டுகள், சொற்களஞ்சியங்கள் ஆகியன 'பேய்' என்ற சொல்லையும் 'பேய்' இணைந்த தொடர்களையும் விளக்கும் பாங்கு

நிரல்படுத்தப் பட்டுள்ளது. அற நூல்கள் பேய்களைப் பார்க்கும் பார்வை, பிற நூல்களின் பார்வையிலிருந்து வேறுபடுவது ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பேயைக் குறிக்கும் அணங்கு, சூர், சூரர மகளிர், பூதம், பேய் மகளிர் போன்றன இலக்கியங்களில் எவ்வாறு சுட்டப் பெற்றுள்ளன என்பது விளக்கப் பெறுகிறது. பிறப்பின் வகைப்பாடும், பேய்ப் பிறப்பிற்கான காரணங்களும் சமய இலக்கியங்களின் வழிநின்று ஆய்வு செய்யப் பெற்றுள்ளன.

இயல் மூன்று. 'பேயோட்டப் பாடல்கள் அமைப்பு'.

பெரியார் மாவட்டப் பேயோட்டப் பாடல்களின் அமைப்பையும் உட் கூறுகளையும் இவ்வியல் விரிவாக எடுத்துரைக்கிறது. இஃது ஒரு பகுப்பிய லாய்வு ( Analytical research) எனலாம். பூசாரிகளின் மன நிலை, உணர்வுகள் பேயாடுவோரின் மன நிலை, உணர்வுகளோடு ஊடாடுவதன் விளைவே ( the resultant effect of the interaction between the mental state and feelings of the exoroist and those of the possessed person) இப்பாடல்கள். இறை வணக்கத்தில் தொடங்கிக் குரு வணக்கம் சொல்லி இவை தொடர்கின்றன. இப்பாடல்களில் பேய் பற்றிய விவரங்கள் விசாரிக்கப் படுகின்றன. 'பேய்ப்பாட்டில்' கேட்ட விவரங்கள் விளம்பப் பெறுகின்றன. பேயோட்டப் பாடல்களின் பேயோட்டச் சடங்குகள் குறிப்பிடப்படுகின்றன.

பேயோட்டப் பாடல்கள், சமுதாயச் சூழல்களைப் படம் பிடித்துக் காட்டுவதும், பேயோட்டும் பூசாரிகளின் வட்டார வழக்குச் சொல்லாட்சித் திறனையும் இலக்கிய வழக்குத் தொடராட்சித் திறனையும் வெளிப் படுத்துவதும் விளக்கமாக ஆய்வு செய்யப் படுகின்றன. இப்பாடல் களால் அறியலாகும் ஆடவர் பெண்டிர் ஆடை அணிகலன்களும், ஒப்பனை விவரங்களும், உணவுப் பழக்கங்களும், குடும்ப உறவு நிலைகளும் சுட்டப்

பெறுகின்றன. பூசாரிகளின் அண்ணமார் கதைப் பாடல் பயிற்சியின் பாதிப்புகள் இப்பாடலில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடப் படுகிறது. கருத்து (theme or content)வடிவம் ( texture) சூழல் (context) ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஒரு பகுப்பாய்வாக இவ்வியல் அமைந்துள்ளது.

இயல் நான்கு. 'பூசாரிகளும், சடங்குகளும்'.

இவ்வியல் பூசாரிகளையும் அவர் தம் மந்திரச் சடங்குகளையும் விரிவாக ஆய்கிறது. மானிடவியலறிஞர்கள் மந்திரங்கள், சடங்குகள், விலக்குகள் குறித்து இதுகாறும் குறிப்பிட்டுள்ள செய்திகள் பேயோட்டும் பூசாரிகளுக்கும், அவர்கள் செய்யும் மந்திரச் சடங்குகளுக்கும் பொருத்தப் பாடு உடையன. இது நுணுகி ஆய்ந்து புலப்படுத்தப் படுகிறது. பூசாரி களின் தோற்றமும், வளர்ச்சியும் ( origin and development ) மானிட வியலடிப்படையில் (anthropological basis) ஆய்வு செய்யப் பட்டுள்ளன. பெரியார் மாவட்டப் பூசாரிகளின் உருவ அமைதி (appearance) பிற மாவட்டக் கோணங்கிகளின் தோற்றப் பொலிவி லிருந்து வேறுபடும் பாங்கு சுட்டிக் காட்டப் படுகிறது. இம்மாவட்டப் பூசாரிகளின் வாழ்க்கை முறைகள் பிற மாவட்டப் பேயோட்டிகளின் வாழ்க்கை முறைகளோடு ஒப்பு நோக்கப் பட்டுள்ளன. பேயோட்டிகள் செய்யும் சடங்குகள் முழுமையாக ஆய்வு செய்யப் பெற்றுள்ளன. உடுக்கும் இசையும் பேயோட்டுதலில் வகிக்கும் பங்கும் உடுக்கு செய்யப்படும் முறைகளும் இசைக்கப்படும் முறைகளும் களப் பணியில் கிடைத்த விவரங்களின் அடிப்படை யிலும் முன்னோர் கருத்துகளின் அடிப்படையிலும் சுட்டிக் காட்டப்படுகின்றன. இவ்வியல் ஒரு மானிட வியலாய்வாகும்.

இயல் ஐந்து. 'பெரியார் மாவட்டப் பேயோட்டப் பாடல்கள் - பிற மாவட்டப் பேயோட்டப் பாடல்கள் - ஓர் ஒப்பீடு'.

இவ்வியல் ஓர் ஒப்பீட்டாய்வாக (Comparative study) அமைந்துள்ளது. மதுரை மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் பல்வேறு ஆய்வாளர்கள் தொகுத்திருக்கும் பாடல்களோடு பெரியார் மாவட்டப் பாடல்கள் ஒப்பு நோக்கப் பெற்றுள்ளன. அமைப்பின் அடிப்படையிலும் பாடல்கள் தரும் கருத்துகள், சடங்குகள் அடிப்படையிலும் ஒப்பீடு அமைகிறது. பெரியார் மாவட்டப் பாடல்களின் தனித் தன்மைகள் புலப்படுத்தப் பெறுகின்றன.

இயல் ஆறு. 'பேயோட்டப் பாடல்கள் - ஓர் உளவியல் பார்வை'.

இவ்வியல் உளவியலடிப்படையில் (Psychological basis) பேய் பிடித்தோரையும் பேயோட்டப் பாடல்களையும் ஆய்வு செய்கிறது. உளவியலறிஞர்கள் (Psychologists) மன நல அறிஞர்கள் (Psychiatrists) ஆகியோரின் மனம், மன நலம், மன நோய், மன நல மருத்துவம் பற்றிய கருத்துகள் பேய் பிடித்தலோடும், பேயோட்டுதல் சடங்குகளோடும் பொருத்திப் பார்க்கப் பெறுகின்றன. பேய் பிடித்தலுக்கான அறிகுறிகளும் மன நோய்க்கான அறிகுறிகளும் ஒப்பு நோக்கப் பெறுகின்றன. பேய் பிடித்தலுக்கான காரணங்களும் மன நோய்க்கான காரணங்களும் ஒப்பு நோக்கப் பெறுகின்றன. பேயோட்டுதலால் குணமாக வாய்ப்புள்ள மன நோய்கள் இனங்காட்டப் பெறுகின்றன. பேயோட்டுதலால், நலப்பாட்டுக்கு மாறாக நலக் கேட்டுக்கு வழிவகுத்து விடும் சூழல்கள் சுட்டிக் காட்டப் பெறுகின்றன.

தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நலம் பயக்கிற வரை ஒரு நம்பிக்கையும் சடங்கும் குறைபாடுடையதன்று; அந் நம்பிக்கையும் சடங்கும் தனி மனிதனுக்கோ சமுதாயத்துக்கோ ஊறு விளைவிக்கும் எனில் அதன் மரபுச் செழுமை ( traditional richness) கருதித் தொடர்ந்து வைத்துக் கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் இல்லை. மித மன நோயாளிகள் பேயோட்டுதலால் நலம் பெறுகின்றனர்; முதிர் மன நோயாளிகள் நலம் கெடுகின்றனர் என்பது ஐயத்திற்கிடமின்றிச் சுட்டிக்காட்டப் படுகிறது.

ஒரு பொருள் எத்தன்மையது என ஆய்வது அறிவியல் ( Science) அப்பொருள் எவ்வாறு உணரப் படுகிறது, உணர்த்தப் படுகிறது என ஆய்வது மனவியல் (Psychology). பேய் பற்றிய அறிவியலாய்வு நம் வரம்புக்குப் புறம்பானது. மனவியலாய்வே ஆய்வுப் பரப்புக்கு ( research limit ) உட்பட்டது. இவ்வடிப்படையில் இவ்வியல் அமைந்துள்ளது.

இவ்வாய்வு பேய் பிடித்தல், பேயோட்டம் பற்றிய செய்திகளை மானிடவியல் சமூகவியல் உளவியல் அடிப்படைகளில் ஆய்வு செய்வதன் விளைவாக கிராமியச் சமுதாயத்தில் ஒரு தெளிவை உருவாக்க முயற்சி செய்கிறது. மன ஆற்றல் நிலை பற்றிய அறிவும், மனத்தில் எழும் உணர்ச்சிச் சிக்கல் பற்றிய அறிவும், அவற்றைப் புறந்தள்ளுவதற்கான தற்காப்பு உத்திகள் பற்றிய அறிவும், மன ஆற்றல் நிலைகளின் சமனம் ( equilibrium of the mental forces namely Id, ego and super ego) பற்றிய அறிவும் நாட்டுப்புறத்தைத் தொடும் போது நாட்டுப்புறம் விழிக்கும், செழிக்கும் என்று இவ்வாய்வு நம்புகிறது.